# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, SANKARI.

Case No : STC.333/2024 Date: 20.09.2025
Deposition of Witness for : பு.சா.1
Name : கார்த்திகேயன்

(எதிரி ஆஜர், எதிரியின் வழக்கறிஞர் ஆஜர்)

**குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி :-**

1) நான் எதிரிக்கு கொடுத்ததாக சொல்லப்படும் தொகை எனக்கு விவசாயம் மூலமாகவும், தறி தொழில் மூலமாகவும் கிடைத்த தொகை ஆகும். நான் வருமான வரி செலுத்தவில்லை. பொதுவாக, ரூ.20,000/-ம் தொகைக்கு மேல் ஒரு நபருக்கு கடன் கொடுக்கும்போது கடன் தொகைக்கு ஆதரவாக கடனுறுதி சீட்டு எழுதி வாங்குவது வழக்கம் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் எதிரிக்கு கடன் கொடுத்தபோது யார் யார் உடன் இருந்தார்கள் என்றால் நான் மட்டும் தான் இருந்தேன். எதிரியுடனும் யாரும் வரவில்லை என்றால் சரிதான்.

2) எதிரி என்னிடம் வெற்று காசோலை தான் கொடுத்தார் என்றால் சரியல்ல, பூர்த்தி செய்து தான் கொடுத்தார். எதிரி என்முன்னிலையில் பூர்த்தி செய்தாரா என்றால் இல்லை, வரும்பொழுதே பூர்த்தி செய்து எடுத்து வந்தார், என் முன்னிலையில் கையொப்பம் செய்து கொடுத்தார். வங்கியில் காசோலையை வசூலுக்கு தாக்கல் செய்தபோது அதற்குண்டான வங்கி சலானை யார் பூர்த்தி செய்தது என்றால் வேறு ஒரு நபர் பூர்த்தி செய்து கொடுத்தார், அந்த நபர் யார் என்று எனக்கு தெரியாது. மேற்படி, நபர் எங்கள் ஊரை சார்ந்தவர் அல்ல.

3) நான் வங்கியில் வசூலுக்கு தாக்கல் செய்த வங்கி சலானில் உள்ள கையெழுத்தும், இவ்வழக்கு காசோலையில் உள்ள நிரப்பிய அம்சங்களும் ஒரே நபரால் பூர்த்தி செய்யப்பட்டவை என்றால் சரியல்ல. நான் சொல்வது தவறு என்றால் சரியல்ல. இவ்வழக்கு காசோலை வசூலாகாமல் திருப்பிய விவரத்தை நான் எதிரியிடம் எங்கு வைத்து சொன்னேன் என்றால் நான் நேரில் சந்தித்து சொல்லவில்லை, வழக்கறிஞர் அறிவிப்பு தான் அனுப்பினேன். அவ்வாறு நான் எதிரியை சந்தித்தேன் ஆனால் அவர் கண்டுகொள்ளவில்லை என்று எனது பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிட்டிருந்தால் அது தவறு என்றால் சரிதான்.

4) நான் எதிரிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பை யார் பெற்றுக்கொண்டார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியவில்லை. நான் எதிரிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பை எதிரி பெற்றுக்கொள்ளவில்லை என்றும், அதனால் தான் எதிரி பதிலறிவிப்பு எதுவும் அனுப்பவில்லை என்றால் சரியல்ல. தாழையூர் சேர்ந்த குமார் மற்றும் கரையானூரை சார்ந்த குமார் ஆகிய இருவரை வைத்து பஞ்சாயத்து பேசப்பட்டது என்றால் சரியல்ல. நான் மேற்படி, நபர்களிடம் வழக்கை திரும்ப பெற்றுக்கொள்வதாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. மேற்சொன்ன நபர்களை சாட்சிகளாக விசாரிக்க எனக்கு ஆட்சேபணை ஏதும் இல்லை என்றால் சரிதான்.

5) எதிரி எனது தந்தையிடம் கடந்த 2017 ம் வருடம் ரூ.50,000/-ம் பெற்ற கடனுக்கு ஆதரவாக கொடுத்த காசோலையை கடனை திரும்பி செலுத்திய பின்பும் காசோலையை திரும்ப கொடுக்காமல் மோசடியாக பூர்த்தி செய்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனது தந்தையை சாட்சியாக விசாரிக்க

எனக்கு ஆட்சேபணை ஏதும் இல்லை என்றால் அவசியம் இல்லை. எனது தந்தை கூறியும் நான் கேட்காமல் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

6) இந்த வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றும், எதிரி எந்த காலத்திலும் என்னிடம் தொகை எதுவும் பெறவில்லை என்றும், அதற்கு காசோலையும் எதுவும் கொடுக்கவில்லை என்றும், எனக்கு எதிரிக்கு கடன் கொடுக்கும் அளவிற்கு எனக்கு வருமானம் இல்லை என்றும் சொன்னால் சரியல்ல. உண்மையிலேயே, நான் எதிரிக்கு கடன் கொடுக்கும் அளவிற்கு தகுதி இருந்திருந்தால் அதனை ஆவணமாக நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்பேன் என்றால் சரியல்ல. நான் எதிரிக்கு கடன் கொடுத்திருந்தால் வட்டிக்கு தான் கொடுத்திருப்பேன் என்றும், கைமாற்று கடனாக கொடுத்திருக்க மாட்டேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கு பொய் வழக்கு என்பதால் தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

Sd/-S.Sathiya,
Judicial Magistrate No.1,
Sankari.

Sd/-Karthikeyan